**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ஆம் நாள் வியாழக்கிழமை**

**அ.வ.எண்.42/2026**
**[TNDG07 - 000155-2026]**

**கனரா வங்கி, பூலாம்பட்டி கிளை,**
**பழனி வட்டம், அதன்**
**கிளை மேனேஜர் மூலம். .. வாதி**

**எதிர்**

**ராஜேந்திரன் (எ) முருகேசன் .. பிரதிவாதி**

**இந்த வழக்கானது 13.02.2026ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில் என் முன்னர் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டும், இன்று இவ்வழக்கானது ஒருதலைப்பட்ச விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்குப் பிரச்சனையை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக்கொண்டதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்**

**தீர்ப்புரை**

**தாவாத் தொகை ரூ.8,13,521/—ஐயும், மேற்படி தொகை ரூ.8,13,521/—க்கு தாவா தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை 12.55% பின்வட்டியுடன், இவ்வழக்கின் செலவு தொகையையும் சேர்த்து இந்நீதிமன்றம் நிர்ணயிக்கும் ஒரு தினத்திற்குள் வாதி வங்கிக்கு, பிரதிவாதியை செலுத்திவைக்கும்படி முதல்நிலை தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், அதற்கு பிரதிவாதி தவறும்பட்சத்தில், வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள அடமானச் சொத்துக்களை ஏலத்திற்குக் கொண்டுவருவதன் மூலம் தாவாத்தொகை, பின்வட்டி மற்றும் செலவு தொகை வகையறாவை வசூலித்துக்கொள்ள அனுமதி வழங்கும்படி கோரியும், அடமானச் சொத்துக்கள் தீர்ப்பாணைத் தொகைக்கு போதுமானதாக இல்லையெனில், மேற்படி**

தொகையை வசூலிக்க பிரதிவாதியின் மீது தனிப்பட்ட தீர்ப்பாணைக்கு மனு செய்ய உரிமையளிக்கும்படி கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதி வங்கியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இன்று இவ்வழக்கானது ஒருதலைப்பட்ச விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்குப் பிரச்சனையை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக்கொண்டதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது. எனவே, இவ்வழக்கானது தாவாப் பிரச்சனையை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக்கொண்டதாக தள்ளுபடி செய்யப்படுகிறது. நீதிமன்ற முத்திரைக் கட்டணத்தை விதிமுறைகளின்படி வாதிக்கு திருப்பிக் கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 09.04.2026ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில்அவையறியப் பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.04.09 16:25:31 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.